# ஜெர்பரா

1.பசுமைக்குடில் வெள்ளை ஈ, டிரைஅலிரோடிஸ் வேப்பரேரியம் பெமீசியா டபாசி

சேதத்தின் அறிகுறிகள்

- இலையின் அடிப்பாகத்திலிருந்து சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும்.

கட்டுப்படுத்தும் முறைகள்

- மஞ்சள் ஒட்டுப் பொறி வைத்து வெள்ளை ஈக்களைக் கவர்ந்து அழிக்கலாம்.
- 1 லிட்டர் தண்ணீரில் 2 மில்லி மோனோகுரோட்டாபாஸ் (அ) வேப்பம் எண்ணெய் 3 மில்லி கலந்து தெளிக்கவும்.

2. இலைச்சுருள் பூச்சி, லிரியோமைசா ட்ரைஃபோலியை லி. சோன்சு

சேதத்தின் அறிகுறிகள்

பூச்சியின் விபரம்

புழு : பழுப்புநிற 2மிமீ நீளமுள்ள கால்கள் இல்லாத புழுக்கள்.

கூட்டுப்புழு : வளைக்கோடுகளில் மஞ்சள் நிற கூட்டுப்புழு காணப்படும்.

முதிர்âச்சி : வெளிர் மஞ்சள் நிற ஈக்கள்.

கட்டுப்படுத்தும் முறைகள்

- மஞ்சள் ஒட்டுப்பொறி வைத்துப் பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்.

- 1 லிட்டர் தண்ணீரில் டைமீதோயேட் (அ) டைகுளோர்வாஸ் 1 மிலி (அ) 2 மிலி குளோர்பைரிஃபாஸ் கலந்து தெளிக்கவும்.
- 5 சதம் வேப்பம் கொட்டை வடிநீர் தெளிக்கவும்.

3. சிலந்திகள், பாலிஃபேகோடார்ஸோனிமஸ் லேட்டஸ்

ஸ்டெனோடார்ஸோனிமஸ் பலிடஸ்

சேதத்தின் அறிகுறிகள்

- பசுமைக்குடிலில் உள்ள செடிகளின் இலைகள் மற்றும் மொட்டுக்கள் கடுமையாக பாதிக்கப்படும்.
- பூக்கள் உருக்குலைந்து / வடிவமற்று இருக்கும்.

பூச்சியின் விபரம்

- ஆண் சிலந்திகள் சிறியது வெளிர் மஞ்சள் நிறமுடையது.
- பெண் சிலந்தி மஞ்சள் நிறமானது ஆணைவிட சிறியது.

கட்டுப்படுத்தும் முறைகள்

- 1 லிட்டர் தண்ணீரில் 2 மிலி டைக்கோபால் கலந்து தெளிக்கவும்.

4.அசுவினி மைசஸ் பெர்ஸிகோ ஏபிஸ்ஃபேபே

சேதத்தின் அறிகுறிகள்

- இளம் இலையில் சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும் அதனால் திசுக்கள் சேதமடையும்.

கட்டுப்படுத்தும் முறைகள்

- 1 லிட்டர் தண்ணீரில் 2 மிலி மாலத்தியான் (அ) எண்டோசல்பான் கலந்து தெளிக்கவும் (அ) அசேப்பேட் 2 கிராம் கலந்து தெளிக்கவும்.